**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வேதாரண்யம்.**

**முன்னிலை: திருமதி. G.சுதா, B.Sc., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,

வேதாரண்யம்.

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 03- ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2058 ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி மாதம் 020-ஆம் நாள்

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.150/2021**

CNR. No: TNNG05-002918-2021

| | | |
|---|---|---|
| 1. | குற்றமுறையீட்டாளர் பெயர் | அரசுக்காக:<br>காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,<br>வாய்மேடு காவல் நிலையம்.<br>குற்ற எண். 16/2020. |
| 2. | எதிரி | 1. ராஜமாணிக்கம், வயது 26/2020<br>த/பெ. தங்கராசு,<br>அண்ணாநகர், ஆயக்காரன்புலம்-3.<br>2. ஆறுமுகம்(எ)மாதவன், வயது 19/2020<br>த/பெ. தங்கராசு,<br>அண்ணாநகர், ஆயக்காரன்புலம்-3.<br>3. செல்வம், வயது 30/2020<br>த/பெ. மாணிக்கம்,<br>அண்ணாநகர், ஆயக்காரன்புலம்-3. |
| 3. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | 1 முதல் 3 வரையான எதிரிகள் கைது செய்யப்படவில்லை. |
| 4. | எதிரிகள் பிணையில் | 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மாண்புமிகு |

SUDHA GANESAN

Digitally signed by SUDHA GANESAN
Date: 2026.06.03 16:08:38 +0530

| | | |
|---|---|---|
| | விடுவிக்கப்பட்ட நாள் | மாவட்ட அமர்வு நீதிமன்ற Crl.M.P.No. 399/2020, நாள்:06.02.2020 ம் தேதி வழங்கப்பட்ட முன்பிணை உத்தரவு படி கடந்த 18.02.2020-ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்றுள்ளார்கள். |
| 5. | இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 27.08.2021-ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, 27.08.2021-ஆம் தேதி CC.No.150/2021-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது. |
| 6. | கு.வி.மு.ச.பிரிவு 281-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து எதிரிகளிடம் கேட்கப்பட்ட நாள் | 05.07.2022 |
| 7. | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | 1 முதல் 3 வரையிலான எதிரிகளின் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 427, 506(i) - ன் கீழ் |
| 8. | எதிரிகளின் கோரிக்கை | பொய் வழக்கு, குற்றவாளிகள் இல்லை. |
| 9. | இவ்வழக்கில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழான மனுக்கள் நீங்கலாக இதர தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் அவைகள் மீதான உத்தரவு, அது சம்பந்தான மேல் முறையீட்டு உத்தரவு | எதிரிகள் தரப்பில் கடந்த 01.06.2026-ஆம் தேதி இவ்வழக்கின் உபய தரப்பினர்கள் சமரசமான முறையில் பேசி தீர்த்துகொண்டுவிட்டனர் என்றும், மேல் நடவடிக்கை தேவையில்லை என்று கருதுவதாக கூறி பிரிவு 359 BNSS -இன் கீழ் தாக்கல் செய்த கு.ப.ம.எண். 233/2026 ஆனது அன்றே இந்நீதிமன்றத்தால் எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச.பிரிவு 294(b) ன் கீழான குற்றமானது சமரசம் செய்ய முடியாத குற்றம் எனக் கூறி தள்ளுபடி செய்யப்பட்டது. |

<table>
<tr><td>10.</td><td>இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் நாள் விபரம்</td><td>
<table>
<tr><th>அரசு தரப்பு/ எதிரி தரப்பு சாட்சிகள்</th><th>முதல் விசாரணை நாள்</th><th>குறுக்கு விசாரணை நாள்</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>01.06.2026</td><td>01.06.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>01.06.2026</td><td>01.06.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>02.06.2026</td><td>02.06.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>11.</td><td>நீதிமன்றத்தின் முடிவு</td><td>முடிவில், 1 முதல் 3 வரையிலான எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 427, 506(i)- ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>12.</td><td>தீர்ப்புரை</td><td>முடிவில் 1 முதல் 3 வரையான எதிரிகளுக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 427, 506(i)- ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 248(1) ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>13.</td><td>வழக்கு சொத்து குறித்த உத்தரவு</td><td>இவ்வழக்கு சம்பந்தமாக வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்குச் சொத்துப்பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.</td></tr>
</table>

இந்த ஆண்டுப்பட்டிகை வழக்கு 27.08.2021-ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று 03.06.2026 ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி

வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V.T. கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற கவனமாக பரிசீலனையில் இருந்துவந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ...

## தீர்ப்புரை

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் வைரக்கண்ணு அண்ணன் கர்ணன் மகன் முரளிக்கும், மற்றொரு அண்ணன் செல்வராசு மகன் சுரேஷ் என்பவருக்கும் நிலப்பிரச்சளை சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்த நிலையில், நிகழ்தாரர் புகார்தாரர் சொல்லிக்கொடுத்துதான் சுரேஷ், முரளியிடம் பிரச்சனை செய்கிறார் என்று நிகழ்நிலை புகார்தாரர் அண்ணன் கர்ணன் சொல்லி வந்த நிலையில், கடந்த 21.01.2020-ம் தேதி 16.00 மணியளவில் நிகழ்நிலை புகார்தாரர் ஆயக்காரன்புலம்-3, அண்ணாநகரில் உள்ள தனது வீட்டில் தன் குடும்பத்தை பற்றி பேசிக்கொண்டிருந்தபோது, அவ்வழியே வந்த கர்ணனுக்கு வேண்டியபட்ட 1 முதல் 3 வரையான எதிரிகள் கர்ணனை பற்றிதான் பேசுகிறார் என நினைத்து நிகழ்நிலை புகார்தாரின் வீட்டு வாசலுக்கு வந்து, வெளியே வந்த நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து தேவிடியா, குச்சிகாரி மகனே எங்க கர்ணனை பற்றி யாண்டா பேசுகிறாய் என காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியும், எதிரிகள் மூவரும் தங்கள் கையில் வைத்திருந்த கம்பால் நிகழ்நிலை புகார்தாரரை மாறி மாறி அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், நிகழ்நிலை புகார்தாரரின் வீட்டிலிருந்த ரூ.500/- பொறுமானமுள்ள

சமையல் பாத்திரங்களை கம்பால் அடித்து உடைத்து சேதப்படுத்தியும், நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து ஒழுங்கு மரியாதையாக இரு இல்லைனா உன்னை கொல்லாம விடமாட்டோம் என மிரட்டியுள்ளார்கள். எனவே 1 முதல் 3 வரையான எதிரிகளின் குற்றச்செய்கையானது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 427, 506(i) - ன் படி, தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வாய்மேடு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அரசுத்தரப்பில் தாக்கலான இறுதி அறிக்கை உரிய பரிசீலனைக்கு பிறகு இந்நீதிமன்ற கோப்பிற்கு இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 427, 506(i)-ன் கீழ் எடுக்கப்பட்ட பின்னர், எதிரிகளுக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராவதற்கான அழைப்பாணை வழங்கப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், எதிரிகளுக்கு அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 கு.வி.மு.ச-வின் படி இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்பு அரசு தரப்பு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து, 1 முதல் 3 வரையான எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 427, 506(i) - ன் படி, குற்றச்சாட்டுகள் விளக்கி வினவ, பொய் வழக்கு என்றும், தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்றும் மறுத்துரைத்தார்கள்.

3. அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு அரசு தரப்பில் 1 முதல் 3

வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 1 முதல் 9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் யாதொரு சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4(1). அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக விசாரிக்கப்பட்ட வாய்மேடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. சிங்காரவேலு- அ.சா.3 வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் - பட்டியல் சாட்சி.8 திரு. பன்னீர்செல்வம் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் என்பவருக்காக கூடுதல் சாட்சியமளித்துள்ளார். வாய்மேடு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் - பட்டியல் சாட்சி.8 திரு. பன்னீர்செல்வம் கடந்த 21.01.2020-ஆம் தேதி வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தினை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலத்தில் 1 முதல் 3 வரையான எதிரிகள் அ.சா.1 யை பார்த்து தேவிடியா, குச்சிகாரி மகனே எங்க கர்ணனை பற்றி யாண்டா பேசுகிறாய் என காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியும், எதிரிகள் மூவரும் தங்கள் கையில் வைத்திருந்த கம்பால் அ.சா.1 யை மாறி மாறி அடித்து, சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், அ.சா.1 வீட்டிலிருந்த ரூ.500/- பொறுமானமுள்ள சமையல் பாத்திரங்களை கம்பால் அடித்து உடைத்து

சேதப்படுத்தியும், அ.சா.1யை பார்த்து ஒழுங்கு மரியாதையாக இரு இல்லைனா உன்னை கொல்லாம விடமாட்டோம் என மிரட்டியுள்ளார்கள் என்றும் கூறியுள்ளார்.

4(2). அ.சா.1 பிறழ் சாட்சியாகியுள்ளார். அ.சா.1 மூலமாக புகார்வாக்கு மூலத்தில் உள்ள அ.சா.1-னின் கையொப்பம் அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி.8 திரு. பன்னீர்செல்வம் 24.01.2020 அன்று காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாலா மற்றும் மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களையும், மகஜர் சாட்சிளையும் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வேதாரண்யம் அரசு மருத்துவமனை மருத்துவர் ஜெயராஜ் மற்றும் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனை மருத்துவர்கள் யோகப்பிரியா மற்றும் குமரசேன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 427, 506(i)-இன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். அ.சா.3 மூலமாக புகார் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம், விபத்து பதிவேடுகள் மற்றும் காயச்சான்றுகள் ஆகியவை முறையே அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.9-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இத்துடன் அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது. அரசு

தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளில், இவ்வழக்கு எதிரிகளுக்கு பாதகமாக அளிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து, 02.06.2026-ஆம் தேதி பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச-இன் கீழ் இவ்வழக்கு எதிரிகளிடம் எடுத்துக்கூறி விளக்கி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இவ்வழக்கு எதிரிகள் தங்களுக்கு எதிராக கூறப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் பொய் என்றும், வழக்கு குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டபோது பொய் வழக்கு என்றும் மறுத்துரைத்தார். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறப்பட்டு, சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6. எனவே, 1 முதல் 3 வரையான எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 427, 506(i) - ன் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

7. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும் சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

8(1). அரசு தரப்பு வழக்கில் அ.சா.1யை பார்த்து 1 முதல் 3 வரையான எதிரிகள் தேவிடியா, குச்சிகாரி மகனே எங்க கர்ணனை பற்றி யாண்டா பேசுகிறாய் என காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியும், எதிரிகள் மூவரும் தங்கள் கையில்

வைத்திருந்த கம்பால் அ.சா.1 யை மாறி மாறி அடித்து, சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், அ.சா.1 வீட்டிலிருந்த ரூ.500/- பொறுமானமுள்ள சமையல் பாத்திரங்களை கம்பால் அடித்து உடைத்து சேதப்படுத்தியும், அ.சா.1 யை பார்த்து ஒழுங்கு மரியாதையாக இரு இல்லைனா உன்னை கொல்லாம விடமாட்டோம் என மிரட்டியுள்ளார்கள் என்று கண்டுள்ளது.

8(2). ஆனால் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில் சுமார் 6 வருடங்களுக்கு முன்பு, ஒருநாள் மாலையில் தனது வீட்டில் குடும்பத்தாருடன் பேசிக் கொண்டிருந்தபோது, வெளியில் சத்தம் கேட்டு வந்து பார்த்தபோது தெருவில் யாரோ சிலர் கூட்டமாக நின்று, தகராறு செய்து கொண்டிருந்தார்கள் என்றும், அதை தான் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தபோது அந்த கூட்டத்தில் இருந்தவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு, தள்ளுமுள்ளு ஏற்பட்டு தனது மீது விழுந்ததில், தனக்கு காயம் ஏற்பட்டது என்றும், தனக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே கருத்துவேறுபாடு இருந்ததால் எதிரிகள் தான் தன்னை கூட்டத்தில் தாக்கியிருப்பார்கள் என்று சந்தேகத்தின் பேரில் மிகைப்படுத்தி போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டதாக அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியளித்துள்ளார்.

8(3). மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக அ.சா.2 விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 சாட்சி தனது சாட்சித்தில் வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது

என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் பாதகமாக சாட்சியளித்துள்ளார்கள்.

8(4). மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக விசாரிக்கப்பட்ட கூடுதல் சாட்சி அ.சா.3 தனது சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளித்துள்ளார். அ.சா.3 மூலமாக புகார் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம், விபத்து பதிவேடுகள் மற்றும் காயச்சான்றுகள் ஆகியவை முறையே அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.9-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் அ.சா.3-னின் சாட்சியத்தின் மூலம் வழக்கு சம்பவத்திற்கு பின்பு ஏற்பட்ட நிகழ்வுகளை ஊர்ஜிதம் செய்ய இயலுமே தவிர, வழக்கு சம்பவம் எவ்வாறு நடைபெற்றது என்பதை நிரூபிக்கும் வகையில் அவருடைய சாட்சியம் அமையவில்லை. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சி அ.சா.1 மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.2 ஆகியோர் பிறழ் சாட்சியாகியுள்ளதால் அ.சா.3-ன் சாட்சியத்தினை மட்டும் வைத்து எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று முடிவுக்கு வர இயலாது.

9. எனவே மேற்படி பொருண்மைகளை வைத்து பார்க்கையில், எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. இறுதியாக, 1 முதல் 3 வரையான எதிரிகளுக்கு எதிரான இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 427, 506(i)

கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகளை பிரிவு 248(1) கு.வி.மு.ச.வின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

10. இவ்வழக்கில் எதிரிகள் மற்றும் எதிரிகளின் ஜாமின்தாரர்கள் எழுதிக் கொடுத்த பிணை ஆவணங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 03 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்.........G. சுதா, B.Sc., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், வேதாரண்யம்.

**இணைப்பு :**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் :**

அ.சா.1. : திரு. வைரக்கண்ணு (நிகழ்நிலை புகார்தாரர்)

அ.சா.2. : திரு. கார்த்தி

அ.சா.5.: திரு. சிங்காரவேலு, காவல் உதவி ஆய்வாளர், வாய்மேடு

**அரசு தரப்பில் குறியீடுசெய்யப்பட்ட சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 21.01.2020 | புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1 னின் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 21.01.2020 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | 24.01.2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 24.01.2020 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 24.01.2020 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 21.01.2020 | வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் வழங்கிய அ.சா.1 னின் விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.7 | 22.01.2020 | நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் வழங்கிய அ.சா.1 னின் விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.8 | 06.02.2020 | வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் வழங்கிய அ.சா.1 னின் காயச்சான்று |
| அ.சா.ஆ.9 | 06.02.2020 | நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் வழங்கிய அ.சா.1 னின் காயச்சான்று |

**அரசு தரப்பில் குறியீடுசெய்யப்பட்ட சான்று பொருள் : இல்லை.**

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் : இல்லை.**

(ஒப்பம்.........G. சுதா, B.Sc., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், வேதாரண்யம்.

**நகல் - மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

1. இந்த தீர்ப்புரையின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

2. இந்த வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இந்த வழக்கின் எதிரிகள் வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்கள்.

4. இந்த வழக்கில் சான்று பொருட்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை.